1990 ஏப்ரல் 12]

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் ; தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை இந்த அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்.

பேரவை முன்வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் குழுவின் ஐந்தாவது அறிக்கையை குழுத் தலைவர் சார்பாக அவைக்கு அளிக்கிறேன்.

2. தகவல் கோரல் — தொடர்ச்சி,

(ஈ) மானியக் கோரிக்கைகளுக்கான கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்கு முன்னதாகவே வழங்கப்பட வேண்டிய அவசியம் குறித்து.

* திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, பாயிண்ட் ஆப் ஆர்டர். இன்றைக்கு 3 மானியக் கோரிக்கைகள் மீது வவாதிக்க இருக்கிறோம். தாங்கள் இந்த அவையில் அறிவித்தீர்கள். மானியக் கோரிக்கைகள் எடுத்துக் கொள்வதற்கு 48 மணிக்கு முன்னால் அதுபற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்குச் சேர்க்கப்பட வேண்டுமென்று தெரிவித்தீர்கள். இன்றைய நிகழ்ச்சி நிரலில் உள்ள இரண்டு மானியக் கோரிக்கைகள் மீதான விளக்கக் குறிப்புகள் நேற்றையதினம் தான் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டன என்று பதிவாகி இருக்கிறது. இது தொடர்ந்து நீடித்தால், அவைத் தலைவர் அறிவித்த அறிவிப்பைச் செயல்படுத்துவதில்லை என்று சொன்னால், எங்களின் உரிமையை யாரிடத்தில் போய் பாதுகாக்க வேண்டுமென்று கேட்பது என்று தெரியவில்லை. இனியேனும் அவைத் தலைவருடைய அறிவிப்பு கடைபிடிக்கப்படுவதற்கு ஆவன செய்யப்படுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நம்முடைய உறுப்பினர் அவர்களுடைய உணர்வை நான் ஏற்கெனவே அறிவித்து இருக்கிறேன். மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் உறுப்பினர்களுக்குக் கண்டிப்பாக 48 மணி நேரத்திற்கு முன்னால் தரப்படவேண்டும் என்று சொல்லியிருக்கிறேன் அதற்குக் காரணம் அவற்றை அவர்கள் படித்து இந்த அவையிலே பேசவேண்டும். பல செய்திகளை எடுத்து வைக்கவேண்டும்.

திறனாய்வு செய்யவேண்டும். அரசிற்குத் தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு மிகுந்த வாய்ப்பளிக்க வேண்டியது இந்த அவையினுடைய பொறுப்பு. அதுவும் பேரவைத் தலைவருடைய பொறுப்பு. எனவே, மீண்டும் இதை அனைத்து அமைச்சர்களும், அனைத்துத் துறைகளுடைய செயலாளர்களும், மற்றும் ஆணையாளர்களும், மிகக் கவனமாகவும், எச்சரிக்கையாகவும் எடுத்துக் கொண்டு இதில் முழுமையாக உறுப்பினர்களுடைய முழு வாய்ப்பிற்கும் இடமளிக்கத்தக்க வகையில் அடுத்து வருகின்ற மானியக் கோரிக்கைகளுடைய கொள்கை விளக்கக் குறிப்புகள் அனைத்தும், நான் ஏற்கெனவே அறிவித்தபடி இரண்டு நாட்களுக்கு முன்னதாகவே அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவேண்டும் என்றும், அதை அனைவரும் மதித்துச் செயல்படவேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

*திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, இன்றைக்கு வியாழக்கிழமை. நாளைய தினத்திலிருந்து 3 நாட்களுக்குச் சட்டமன்றம் இல்லை. ஆகவே, நீங்கள் சொன்னபடி இரண்டு நாட்கள் என்றால், இன்றைக்கே எல்லா உறுப்பினர்களும் ஊருக்குச் சென்று விடுவோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருந்து வாங்கிக் கொண்டு போக வேண்டும்.

திரு. வி. கே. சின்னசாமி : திங்கள்கிழமை வருகிற மானியக் கோரிக்கை குறித்த அறிக்கைகளை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இருந்து வாங்கிக் கொண்டு போகவேண்டும் என்ற பொறுப்பில்தான் நான் சொல்கிறேன். ஊருக்குப் போவது என்றால் சொல்லுங்கள், ஏற்றி அனுப்பி வைக்கிறேன். (குறுக்கீடு) விடுமுறை நாட்களில் இன்னும் கொஞ்சம் முன்னதாக இவர்களைக் கவனிக்க வேண்டும்.

6. மானியக் கோரிக்கைகள், 1990-91— விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 10—பால் வழங்கு திட்டங்கள்.

* மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;

''மானியக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூபாய் 3,46,08,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்.''